

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.10.2025) மதுரை, தெப்பக்குளத்தில் உள்ள மாமன்னர் மருது சகோதரர்கள் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, இ.பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, திருமதி. பி.கீதா ஜீவன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.10.2025) பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 118வது பிறந்த நாளையொட்டி மதுரை, கோரிப்பாளையத்தில் உள்ள முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, இ.பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, திருமதி. பி.கீதா ஜீவன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



நேற்று முன்தினம் (29.10.2025) தென்காசி மாவட்ட அரசு விழாவில் கலந்துகொள்ள செல்லும் வழியில், சுரண்டை நகராட்சி, கீழசுரண்டையில் சமீபத்தில் நடைபெற்ற சிலம்பாட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்கள் சிலம்பம் சுற்றி அளித்த உற்சாக வரவேற்பின்போது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அம்மாணவர்களுடன் சிலம்பம் சுற்றி உற்சாகப்படுத்தினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.10.2025) தென்காசியில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கி, அவர்களுடன் உரையாடினார். இந்நிகழ்வின்போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் ஆகியோர் உடனிருந்தனர்.

### “கலைஞரின் கனவு இல்லம்” திட்டத்தின் கீழ் – தென்காசி மாவட்டம், கழுநீர்குளம் ஊராட்சியில்

# செல்வி பிரேமா குடும்பத்திற்காக கட்டப்பட்டு வரும் வீட்டின் கட்டுமானப் பணிகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

சென்னை, அக். 31-

சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் 25.9.2025 அன்று நடைபெற்ற தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியின் கொண்டாட்டமான “கல்வியில் சிறந்த தமிழ்நாடு” நிகழ்ச்சியில், தென்காசி மாவட்டம், கழுநீர்குளத்தைச் சேர்ந்த மாணவி பிரேமா மழைக்காலங்களில் ஒழுகும் பழைய வீட்டில் தனது பெற்றோருடன் வசித்து வருதாக கண்ணீர் மல்க பேசியிருந்தார். மாணவி பிரேமா பேசிய 24 மணி நேரத்தில், அவருக்கு “கலைஞர் கனவு இல்லம்” திட்டத்தின் கீழ் அரசு வீடு வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டு, அதன்படி அம்மாணவியின் தாயார் திருமதி முத்துலெட்சுமி அவர்கள் பெயரில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணை அடுத்தநாளே வழங்கப்பட்டது.



தென்காசி மாவட்ட அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் (29.10.2025) தென்காசி மாவட்டத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், 25.9.2025 அன்று சென்னையில் நடைபெற்ற ”கல்வியில் சிறந்த தமிழ்நாடு நிகழ்ச்சியில், ஒழுகும் வீட்டில் அப்பா வசித்து வருதாக கண்ணீர் மல்க பேசிய மாணவி பிரேமா அவர்களுக்கு வீடு வழங்க உத்தரவிட்டு, அதன்படி ”கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கழுநீர்குளத்தில் கட்டப்பட்டு வரும் அவ்வீட்டின் கட்டுமானப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, செல்வி பிரேமாவின் பெற்றோர் சு.ராமசாமி திருமதி ரா. முத்துலெட்சுமி ஆகியோரை சந்தித்தார். இந்த நிகழ்வின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி உள்பட அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இதுகுறித்து முதலமைச்சர் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில், “ஒழுகும் வீட்டில் அப்பா இருப்பாரே என்ற கவலை பிரேமாவுக்கு இனி வேண்டாம். எத்தனையோ பேரின் எதிர்ப்பையும் மீறி உங்களைப் படிக்க வைத்த தந்தையிடம், முதல் மாதச் சம்பளத்தைத் தந்து நீங்கள் மகிழ்ச்சி அடைந்தீர்கள். உங்கள் கனவை நிறைவேற்றிய தந்தைக்குக் ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தின்கீழ் புதிய வீடு கட்டிக் கொடுப்பதற்கான ஆணையை வழங்கி நான் மகிழ்ச்சி கொள்கிறேன்” என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், தென்காசி மாவட்ட அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் (29.10.2025) தென்காசிக்கு வருகை தந்த முதலமைச்சர் அவர்கள், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கழுநீர்குளத்திற்கு நேரில் சென்று செல்வி பிரேமா அவர்களின் தாயார் திருமதி ரா. முத்துலெட்சுமி, தந்தை சு.ராமசாமி ஆகியோரை சந்தித்து, கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் அவர்களது வீட்டின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு, அவர்களுடன் உரையாடினார்.

மேலும், செல்வி பிரேமாவிடம் முதலமைச்சர் அவர்கள் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு, உங்கள் வீடு கட்டி கொண்டிருக்கும் இடத்தில் இருந்து தான் பேசுகிறேன், இன்னும் இரண்டு மாதங்களில் வீடு கட்டி முடிக்கப்படும் என்று தெரிவித்தார். அதற்கு செல்வி பிரேமா அவர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்வின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையர் பா. பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை மாநகராட்சி, முதன்மைக் கல்வி அலுவலக வளாகத்தில் உள்ள தேர்வுக்கூடத்தில் பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டிகளை அமைச்சர்கள் ஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் 29.10.2025 அன்று துவக்கி வைத்து, பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்கள். உடன், மேயர் திருமதி.திலகவதி செந்தில், மரு.வை.முத்துராஜா எம்.எல்.ஏ., எம்.சின்னத்துரை எம்.எல்.ஏ., முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம், துணை மேயர் எம்.லியாகத் அலி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதி, தென்னமநாடு ஊராட்சியில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமை முன்னாள் ஒன்றிய இணையமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன், தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் மகேஷ் கிருஷ்ணசாமி, ரமேஷ்குமார், கார்த்திகேயன் மற்றும் அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.